## அம்பகமுவ பிரதேச சபை

## நுவரஎலிய மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 28 திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

நிதிக் கூற்றுகளானவை அம்பகமுவ பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமையொன்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருவின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

1.3.1 பெற வேண்டிய மற்றும் கிடைக்க வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

பெற வேண்டிய கணக்குகள்

--------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 175,074,019 இற்கான மூலதன உதவிக் கணக்கின் மீதியில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள மீதிகளின் பெறுமதி ரூபா 10,350,045 ஆகும்.

செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 182,510,222 ஆக காணபட்டதுடன் அதில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 19,397,262 ஆகக் காணப்பட்டது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,185,941 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,666,978 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவு ரூபா 3,481,037 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 3,481,037 இற்கான குறைவு ஒன்று காணப்பட்டது, அதற்காக 2014 ஆண்டின் போது 02 வருமான விடயங்களில் வருமானம் நூற்றிற்கு 01 முதல் நூற்றிற்கு 06 வரையான வீச்சில் குறைதலும், 05 செலவு விடயங்களில் நூற்றிற்கு 07 முதல் நூற்றிற்கு 100 வரையான வீச்சில் அதிகரித்தலும் காரணமாகியுள்ளது.
மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்பு என ரூபா 27,470,364 தொகை ஒன்று கிடைத்திருந்த போதிலும் சம்பளங்கள் மற்றும் படிகள் என ரூபா 45,333,534 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபையின் வருமானத்தில் இருந்து ரூபா 17,863,170 இற்கான தொகையொன்று சபை ஊழியர்களின் சம்பளம் செலுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. அப் பணம் சம்பள மீளளிப்பு தவிர சபையின் மீண்டுவரும் வருமானத்தின் 42.33% ஆகும்.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு,

| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2014.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவையில் அறவீடுகள் | 2014 ஆண்டின் போது பில் போடப் பட்டவை | ஆண்டின் போது பில் போடப் பட்டவைகளில் அறவீடுகள் | 2014.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவை<br>2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவையி ல் இருந்து | <br>ஆண்டிற்கான பில் போடப் பட்டவைகளி ல் இருந்து | <br>மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 2,487,595 | 899,643 | 7,049,510 | 6,204,062 | 1,587,952 | 845,448 | 2,433,400 |
| கடை வாடகை | 1,997,010 | 110,924 | 7,756,825 | 7,691,702 | 1,886,086 | 65,123 | 1,951,209 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 182,421 | -- | 3,506,680 | 3,506,680 | 182,421 | -- | 182,421 |
| ஏனையவை | 4,513,740 | 229,429 | 1,092,739 | 656,056 | 4,284,311 | 436,683 | 4,720,994 |

2.3.2 வாடகை

-------------

(அ) 2000 ஆண்டின் போது பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் ஹொன்ஸி இரட்டை மாடிக் கட்டட மாதாந்த மதிப்பீட்டு வாடகை ரூபா 9,500 தொகை எனினும் தற்போது அக்கட்டடத்தில் இருந்து 1999 ஆண்டு முதல் ரூபா 1,500 இற்கான மாதாந்த வருமானம் மாத்திரம் அறவிடப்பட்டு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மலசலகூட வாடகைக்கு கொடுப்பதன் மூலம் ரூபா 1,500,000 இற்கான வருமானம் ஒன்றினை உழைப்பதற்கு மதிப்பீடு செய்திருந்த போதும் அதன் மூலம் உள்ளவாறான வருமானம் ரூபா 282,000 ஆகும்.

(இ) வட்டவலை பொது சந்தையின் இலக்கம் 05 கொண்ட கடை வாடகையாளர்களினால் 2003 ஜனவரி 30 திகதி ரூபா 170,000 தொகை இடை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த போதும் இது தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டைப் போலவே மீளாய்வாண்டிலும் கினிகத்ஹேன பொது மலசலகூட கேள்வி மூலம் வாடகைக்கு கொடுத்து சபைக்கு வருமானம் ஒன்றினை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காத போதிலும். அம் மலசலகூடம் பயன்படுத்தும் நபர்களிடமிருந்து வெளிசாராரினால் பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளது என 2015 மார்ச் 20 திகதிய கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

-------------------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபையில் பதிவு செய்துள்ள 04 ஹோட்டல்களில் இருந்து, 12 வாணிப வங்கிக் கிளைகளில் இருந்து மற்றும் 03 தேயிலை தொழிற்சாலைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.4 இறைச்சிக் கடை வாடகை

------------------------------------------

2003 ஆண்டு முதல் 2013 ஆண்டின் இறுதி வரை காணப்படும் ரூபா 1,288,260 இற்கான இறைச்சிக் கடை மற்றும் மீன் கடைகளின் நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.3.5 ஏனைய வருமானங்கள்

------------------------------------

2013 ஆண்டிற்கான வாகனங்கள் பதிவு செய்வதற்காக 26 முச்சக்கர வண்டி சங்கங்களில் இருந்து ரூபா 1,206,000 தொகையொன்று அறவிடப்பட்டிருந்த போதிலும் வாகனத் தரிப்பிட துணை விதி தயாரிப்பதன் தாபனம் காரணமாக நடைமுறை ஆண்டிற்காக 2014 நவம்பர் 30 திகதி வரை 17 முச்சக்கர வண்டி சங்கங்களில் இருந்து ரூபா 419,400 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த தொகைகள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 2,282,920 |
| முத்திரைக் கட்டணம் | 3,176,946 |

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணி உறுதிகள் மற்றும் வரைபுகள் தயாரிக்கப்படாமையால் சபைக்கு சொந்தமான ரூபா 95,534,439 பெறுமதியான காணிகள் மற்றும் கட்டடங்களில் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் காணி மற்றும் கட்டடங்கள் பற்றிய வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏல விற்பனவு மூலம் விற்பனவு செய்வதற்காக கணிப்பீட்டு சபை மூலம் அல்லது வேறு குழு ஒன்றினை அல்லது மோட்டார் வாகன பரிசோதனைகளின் விதப்புரை கிடைத்திருக்காத CPGH – 8124 இலக்கம் கொண்ட கப் வண்டி 2014 செப்டம்பர் 25 ஆம் திகதி ரூபா 1,675,000 தொகைக்கு ஏலவிற்பனவு மூலம் விற்பனவு செய்திருந்த போது ஏல விற்பனவுக்கு நெருக்கமான 05 மாதங்களில் ரூபா 178,576 தொகை ஒன்று செலவிடப்பட்டு புதிய டயர் போடப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆண்டின் போது சபைக்கு சொந்தமான 05 வாகனங்களுக்காக 02 பற்றரிகள் 46 டயர்கள் மற்றும் ரூபா 737,165 பெறுமதியான உதிரிப்பாகங்கள் புதிதாக பொருத்தப்பட்டிருந்த போதிலும் அச் சந்தர்ப்பங்களில் அவ் வாகனங்களில் இருந்து அகற்றப்பட்ட பழைய பற்றரிகள், டயர்கள் மற்றும் உதிரி பாகங்கள் என்பவற்றை திருப்பி ஒப்படைத்திருப்பதாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக அம்பகமுவ கோரளை அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை கௌரவிக்கும் விழாவுக்காக 125 மகளிர் குடைகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 39,844 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------

இலங்கை போக்குவரத்து சபையைச் சேர்ந்த மஸ்கெலிய பஸ் தரிப்பிடத்தின் 2013 ஜனவரி முதல் 2014 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 24,637 இற்கான மின்சார விலைப்பட்டி பிரதேச சபையின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

பகவந்தலாவ நகரத்தில் பஸ் தரிப்பிடம் மற்றும் கடைத் தொகுதிகள் நிர்மாணித்தல் தொடர்பாக 2015 மார்ச் 20 திகதி மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

i. அளவை பத்திரத்தின் விடய இலக்கம் 8.2 இன் பிரகாரம் கதவின் சட்டம் 4'' X 3'' அளவையின் காணப்பட வேண்டும் எனினும் பொருத்தப்பட்டிருந்த 21 கதவு சட்டங்கள் 3 3/4'' X 3'' அளவுகளில் காணப்பட்டது.

ii. வேலை தளத்திற்கு வழங்கியிருந்த முறுக்கு உறுக்கு கம்பிகள் ISO அல்லது SLS நியம சான்றிதழ்கள் காணப்பட்டதென உறுதிப்படுத்தப்படவில்லை. அத்துடன் பயன்படுத்துவதற்று முன்னர் பொறியியலாளரின் அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டின் போது 09 பொது நூலகங்களில் ரூபா 578,655 பெறுமதியான 5475 காணாமல் போன புத்தகங்கள் மற்றும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற் கொள்ளப்பட்ட பண்டக் கணிப்பீட்டின் பிரகாரம் ரூபா 110,923 பெறுமதியான 858 காணாமல் போன புத்தகங்கள் மற்றும் 02 நூலகங்களில் 40 உபகரணங்கள் பற்றாக் குறையின் பெறுமதியினை கணித்து அதற்கு பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4 கணக்களி பொறுப்பும் நல்லாட்சியும்

---------------------------------------------------------

4.1 பாதிட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் நூற்றிற்கு 07% முதல் நூற்றிற்கு 46% வரையும், 07 செலவு விடயங்களில் நூற்றிற்கு 13% முதல் நூற்றிற்கு 100% வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீட்டு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 06 வருமான தலைப்புக்களில் மதிப்பீட்டு வருமானத்தில் ரூபா 9,023,385 தொகையினை உழைப்பதற்கு சபைக்கு இயலாதிருந்தது. அத்துடன் 06 செலவுத் தலைப்புக்களில் மதிப்பீட்டு செலவுகளை மிகைத்து ரூபா 15,422,031 தொகையொன்று செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் மிகை செலவுகளுக்காக முறையான விதமாக செலவு விடயங்களில் மாற்றங்கள் அல்லது குறை நிரப்பு பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு தலைவர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வட்டி செலுத்துதல், பங்கு லாபம் மற்றும் பணிக்கொடை செலவு தலைப்புக்கு பாதீட்டின் மூலம் அல்லது செலவுகள் மாற்றுதல் மூலம் குறைநிரப்பு பாதீட்டின் மூலமும் எதுவித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் அந்த செலவு தலைப்பு தொடர்பாக ரூபா 513,386 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 02 வருமான தலைப்புக்களை சேர்ந்த உப வருமான விடயங்கள் 02 இற்காக பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,250,000 இற்கான வருமானம்அறவீடு சதவீதம் 0% ஆகும்.

(உ) 03 வருமான தலைப்புகளைச் சேர்ந்த 07 உப வரவு விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட ரூபா 4,300,000 தொயைில் அறவீட்டு சதவீதம் 50% இற்கு அல்லது நெருங்கிய மட்டத்தில் காணப்படவில்லை.

4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---------------------------------------------------

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் உப பந்தி 4.2 இன் பிரகாரம் வருடாந்த கொள்வனவு திட்டமொன்று பயன்படுத்தியிருக்கவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

------------------------------

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 2009 ஜூன் 09 திகதிய டீஎம்ஏ/2009/01 கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் நிறுவனத்தில் போதிய அகக்கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 தீர்க்கப்படாத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---------------------------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதி வரை 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) அகக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் நிருவாகம்

(உ) தொக்குக் கட்டுப்பாடு

(ஊ) ஒப்பந்த நிருவாகம்